**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC.110/2020 | Age :48 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW10/ PW- 8 | |
| Name : ஜெயா, காவல் ஆய்வாளர் | Religion : |
| Father's/Husband's Name : | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 27.01.2025.**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் திருமதி. கயல்விழி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**3 வது எதிரி ஆஜரில் இருந்தார். 1,2,4,5 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 கு.வி.மு.ச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மதுவிலக்கு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 26.12.2019 ம் தேதி கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது கருப்பட்டிசேரி கிராமத்தை சேர்ந்த பிரகாஷ் மனைவி சுவாதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய சமுதாய பணிப்பதிவேடு மனு

ரசீது எண்.615/2019 வழங்கி விசாரணைக்கு பிறகு 13.03.2020 ம் தேதி மதியம் 3 மணியளவில் நிலைய குற்ற எண். 2/2020 ல் சட்டபிரிவுகள் 147,498 ஏ,323,, 506(1) இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். (**மேற்படி கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 13.03.2020 ம் தேதி மதியம் 3.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சேட்டு மற்றும் பவழக்கொடி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ( **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் சுவாதி, ரவிச்சந்தின், சாந்திராணி, லோகசித்திரன், பாலுசாமி, அருள்செல்வம் , அசோகன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் அனைவரும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரணடைந்து உரியா பிணையில் வெளிவந்தது தெரிய வந்ததால் எதிரிகளை வழக்கில் கைது செய்யவில்லை. பின்னர் வழக்கின் கோப்பினை பார்வையிட்டு 1வது எதிரி 4ம் எதிரியை திருமணம் செய்ததும் அதற்கு மற்ற எதிரிகள் உடந்தையாக இருந்ததும் தெரிய வந்ததால் வழக்கின் சட்ட பிரிவுகளை 147,498 ஏ,323,, 506(1) இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டத்திலிருந்து 294(பி),147,498 ஏ, 494, 323,, 354, 506(1), உ/இ பிரிவு 109 இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு

பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டமாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன். (**மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு 1வது எதிரிக்கு எதிராக 147,498 ஏ, 494, 323,, 354, 506(1), இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டப்படியும் 2, 3 எதிரிகளுக்கு எதிராக 147,498 ஏ, 323,, 506(1), உ/இ பிரிவு 109 இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டப்படியும் , 4 மற்றும் 5 எதிரிகளுக்கு எதிராக 294(பி), 323, 506(1), இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டப்படிவும் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3 வது எதிரி ஆஜரில் இருந்தார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.01.27 18:20:45 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**